[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1989 மே 4

பேசவேண்டும் என்று நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று நினைத்தால், வீரமணி, எல்லாவற்றையும் இழுக்கவேண்டியதாக இருக்கும். அப்படிப்பட்ட பிரச்சினைத் தேவையா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை முடிவு செய்ய வேண்டியது உரிமைக் குழு, அதிலே தங்கள் கட்சியினரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதை அங்கே தெரிவித்து ஒரு முடிவு எடுக்கவேண்டுகிறேன்.

(ஊ) வினா நேரம் முடிவுற்றவுடன் முக்கியப் பிரச்சினைகள் குறித்து எழுப்ப விரும்பும் உறுப்பினர்கள் பேரவைத் தலைவரிடம் முன் இசைவு பெற வேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாகவே இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லி மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி பிரதமர் அவர்கள் கூட்டிய கருத்தரங்கிலே கலந்துகொள்வது பற்றி ஒரு விளக்கம் அளித்தார்கள். இது அவையில் கேட்கப்பட்டு, அதற்கு பதில் சொல்லப்பட வேண்டியது, தேவை என்பதில் எனக்கு இரண்டாவது கருத்து கிடையாது. ஆனால் இப்படி முன்கூட்டியே தெரிவித்து பதில் சொல்லக்கூடிய வாய்ப்புள்ள அமைச்சர்கள் அதுபற்றி தெரிந்து கொண்டு பதில் சொல்வதற்கான தயார் நிலையை உண்டாக்கவேண்டும் என்பதற்காகத்தான் முன் இசைவு என்பது தரப்படுகிறதே தவிர, மற்றபடி அதில் மரபுகள் மீறல் என்பது வேறு நாங்கள் திடீரென்று எழுந்து கேட்பதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது என்று உறுப்பினர்கள் கருதுவார்களானால், அவர்களுக்கு நான் அளிக்க வேண்டிய பதில் இதுதான்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களே, திரு. அப்துல் லத்தீப் அவர்களுடைய இந்த வினாவிற்கு முதலிலே ஒரு பகுதியில் விடையைச் சொல்லியிருக்கிறார்கள். இது முன் பகுதி. இதை இன்றைக்கு உடனடியாக எழுப்பித்தான் தீரவேண்டும் என்று இல்லை. இதை 8-30 மணிக்குக் கேட்டிருந்தால் கூட அதைப்பற்றிச்சொல்ல முடியும் என்று

1989 மே 4] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் நான் உறுப்பினர்கள் காலதாமதமாக வருவது அல்லது நினைத்தபடி கேட்பது என்பதைப் பற்றி எல்லாம் இப்போது திறனாய்வு செய்ய விரும்பவில்லை. ஆனால் ஒரு சிலர் மட்டும் இதை அப்படிப் பயன்படுத்திக் கொண்டு, அவ்வப்போது வினாக்களை எழுப்புவதும், நான் தீர்ப்பு அளித்து, அதற்கு அனுமதி அளிக்க மறுத்த பிறகும் கூட விடாப்பிடியாக, வீம்பு செய்வதுமான போக்குகள் தொடருமானால், பேரவைத் தலைவர் தன்னுடைய கடமையை இந்த அவையிலே செய்ய முடியாது என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பிறகு நானும் பேரவைத் தலைவர் பதவியை விட்டுவிட்டு ஓர் உறுப்பினராகவே இருந்து கடமையாற்றக்கூடிய நிலைமைதான் வருமே தவிர, அதிலே எந்தவகையான மாறுபாடான கருத்துக்கும் இடம் இருக்க முடியாது. இப்படி பலரும்எழுந்து கேட்பதுஅவையினுடைய நேரத்தை மிகுதியும் வீணடிக்கிறது என்பது குறித்து நம்முடைய அவை முன்னவர்அவர்கள் எனக்கு எழுதித் தந்த குறிப்பையும் நான் இங்கே படிக்க விரும்புகிறேன்.

Adjourment Motions: as a rule, shall not be allowed if they refer to day-to-day administration and they may be permitted as Call Attention Motions. Even strike by students or labourers may be taken up as Adjournment Motions with prior notice to the concerned Ministers and the Ministers shall be prepared with materials to reply. Zero hour is not permissible as per the regulations of the House. Yet the leaders of the Opposition parties may be permitted on rare occasions to raise any important issue which requires immediate clarifications and that too, when it comes within the direct responsibility of the Government.

அதை உறுப்பினர்கள் அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.